
நமது தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள் தொடர்புக்கு:
94436 99066
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com

RNI-TNTAM/2023/88253

நமது தினகனி
NAMADHU DHINA KANI
தமிழ் நாளிதழ்




| Vol: 02 | Issue: 21 | 4 Pages | 21.8.2024 | Wednesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 21 | 4 பக்கங்கள் | 21.8.2024 | புதன்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |



அருள்சேர்ந்த நெஞ்சினார்க் கில்லை இருள்சேர்ந்த
இன்னா உலகம் புகல்

**விளக்கம்:**

அறியாமையாகிய இருள் பொருந்திய துன்ப உலகில் இருந்துவாழும்வாழ்க்கை,அருள்பொருந்தியநெஞ்சம் உடையவர்களுக்கு இல்லை.

# மராட்டியம்: பாலியல் வன்கொடுமையை கண்டித்து போராட்டம் போலீசார் தடியடி



மும்பை, ஆக. 21

மராட்டிய மாநிலம் தானே மாவட்டத்திற்குட்பட்ட பத்லாப்பூரில் அமைந்துள்ள தனியார் பள்ளி ஒன்றில் மூன்று மற்றும் நான்கு வயதுடைய இரண்டு சிறுமிகள் பாலியல் வன்கொடுமைக்குள்ளாக்கப்பட்டுள்ளனர். சிறுமிகள் கழிப்பறை செல்லும்போது அவர்களைப் பின் தொடர்ந்து சென்ற, அதே பள்ளியில் பணிபுரியும் நபர் சிறுமிகளிடம் வன்கொடுமையில் ஈடுபட்டுள்ளார்.

இந்த சம்பவத்தைக் கண்டித்து பள்ளி மாணவ, மாணவர்களின் பெற்றோர்கள், மக்கள் உள்ளிட்ட பலர் பள்ளியை முற்றுகையிட்டு போராட்டத்தில்ஈடுபட்டனர்.போராட்டம்தீவிரமடைந்ததைத்தொடர்ந்து பள்ளி வளாகங்கள் சூறையாடப்பட்டன.

இதேபோன்று பத்லாபூரில் உள்ள ரெயில் நிலையத்தில் ரெயில்களை மறித்து அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். ரெயில் மறியல் போராட்டத்தால்,மும்பைமாநகரின்மத்தியவழித்தடத்தில்இயக்கப்படும் புறநகர்மின்சாரரெயில்கள்பத்லாபூர்ரெயில்நிலையத்தில்நிறுத்தப்பட்டன.

ரெயில் நிலையத்தில் பதற்றம் நிலவியதால், பாதுகாப்பிற்காக போலீசார் குவிக்கப்பட்டிருந்தனர். ஒருகட்டத்திற்கு பிறகு போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது போலீசார் தடியடி நடத்தி கலைத்தனர். இதனால் அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.

இந்த விவகாரம் பூதாகரமாக வெடித்ததைத் தொடர்ந்து, பள்ளியின் முதல்வரை நேற்று (ஆக. 19) பணியிடைநீக்கம் செய்துள்ளது. இந்த விவகாரம்தொடர்பாகபள்ளிஅலுவலகஉதவியாளர்போக்சோசட்டத்தில் கடந்த 17ஆம் தேதி கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதனிடையே பள்ளி சிறுமிகள் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டதை விசாரிக்கும் பணியில் தவறியதாகக் கூறி, மூன்று போலீஸ் அதிகாரிகளை மராட்டிய அரசு பணி இடைநீக்கம் செய்துள்ளது. மேலும், இரண்டு சிறுமிகள் பாலியல் வன்கொடுமைக்கு ஆளானதை விசாரிக்க சிறப்பு புலனாய்வுக் குழுவை அமைத்து மாநில அரசு உத்தரவிட்டுள்ளது.

# ஓணம் வார கொண்டாட்டம் ரத்து பினராயி விஜயன்

திருவனந்தபுரம், ஆக. 21

கேரளா மாநிலம் வயநாடு மாவட்டம் முண்டக்கை, சூரல்மலை உள்ளிட்ட மலைக்கிராமங்களில் கடந்த மாதம் 30ந்தேதி அதிகாலையில் கடும் நிலச்சரிவு ஏற்பட்டது. அங்கு பெய்த கனமழையின் காரணமாக நிலச்சரிவு ஏற்பட்டது. இந்த பேரிடரில் 400க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்.

இதுவரை 231 உடல்களும், 206 உடல் பாகங்களும் நிலச்சரிவு ஏற்பட்ட பகுதிகளில் இருந்து மீட்கப்பட்டுள்ளன. மேலும் 300க்கும் மேற்பட்டோர் மாயமாகினர். நிலச்சரிவில் ஆயிரக்கணக்கானோர் வீடுகளை இழந்து நிவாரண முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில், கேரளாவில் இந்த ஆண்டு ஓணம் வார கொண்டாட்டம் ரத்து செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. வயநாடு பேரழிவால் ஓணம் வார கொண்டாட்டத்தை மாநில அரசு ரத்து செய்துள்ளதாக கேரள முதல்மந்திரி பினராயி விஜயன் அறிவித்துள்ளார்.

# மலேசியாவின் மலாயா பல்கலைக்கழகத்தில் திருவள்ளுவர் இருக்கை : பிரதமர் மோடி அறிவிப்பு

புதுடெல்லி, ஆக. 21

மலேசியாவின் மலாயா பல்கலைக்கழகத்தில் திருவள்ளுவர் இருக்கை அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளதாக பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இந்தியா வந்துள்ள மலேசிய பிரதமர் அன்வர் இப்ராகிம், பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்து இருதரப்பு உறவை மேம்படுத்துவது குறித்து பேச்சுவார்த்தை நடத்தினார். இந்த பேச்சுவார்த்தையை அடுத்து, இந்திய தொழிலாளர்கள் மலேசியாவுக்கு செல்வதை எளிதாக்குவது, மலேசியாவின் மலாயா பல்கலைக்கழகத்தில் திருவள்ளுவர் இருக்கை அமைப்பது உள்ளிட்ட 8 ஒப்பந்தங்கள் கையெழுத்தாகி உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இதுதொடர்பாக பிரதமர் மோடி வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், இன்று நாங்கள் பரஸ்பர ஒத்துழைப்புக்கான அனைத்து துறைகள் குறித்தும் விரிவாக விவாதித்தோம். நமது இருதரப்பு வர்த்தகம் நிலையான முன்னேற்றம் அடைந்து வருவதை நாங்கள் கவனித்தோம். இந்தியாவிற்கும், மலேசியாவிற்கும் இடையிலான வர்த்தகத்தை இப்போது இந்திய ரூபாய் மற்றும் மலேசிய ரிங்கிட்களில் செயலாக்க முடியும். கடந்த ஆண்டு மலேசியாவிலிருந்து இந்தியாவுக்கு 5 பில்லியன் டாலர் முதலீடு செய்ய திட்டமிடப்பட்டது.

"துங்கு அப்துல் ரகுமான்" மலேசியாவில் ஆயுர்வேத இருக்கை ஒன்று அமைக்கப்படுகிறது. இது தவிர, மலாயா பல்கலைக்கழகத்தில் திருவள்ளுவர் இருக்கை அமைக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்த அனைத்து சிறப்பு நடவடிக்கைகளிலும் ஒத்துழைத்த பிரதமர் அன்வர் மற்றும் அவரது குழுவினருக்கு நான் முழு மனதுடன் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

2025ம் ஆண்டில் ஆசியான் அமைப்பின் வெற்றிகரமான தலைமைப் பொறுப்புக்கு இந்தியா முழு ஆதரவையும் அளிக்கும். சர்வதேச சட்டங்களுக்கு இணங்க, சுதந்திரமான கப்பல் போக்குவரத்து மற்றும் வான்வழிப் போக்குவரத்துக்கு நாங்கள் உறுதிபூண்டுள்ளோம். அனைத்து சர்ச்சைகளுக்கும் அமைதியான முறையில் தீர்வு காண வேண்டும் என்பதற்காக குரல் கொடுப்போம். மேதகு பிரதமரே, உங்களது நட்புக்கும், இந்தியாவுடனான உறவில் உங்களது அர்ப்பணிப்புக்கும் நாங்கள் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம். உங்களது வருகை வரும் பத்தாண்டுகளுக்கு நமது உறவுகளுக்கு புதிய திசையை அளித்துள்ளது" என்று அதில் கூறப்பட்டுள்ளது.

# ரெயில்வே மேம்பாட்டு திட்டங்களுக்கு ரூ.6,362 கோடி ஒதுக்கீடு: மு.க.ஸ்டாலினுக்கு ரெயில்வே அமைச்சர் பதில்

சென்னை, ஆக. 21

தமிழக ரெயில்வே திட்டங்கள் தொடர்பாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மத்திய ரெயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவுக்கு கேள்விகள் எழுப்பி நேற்று கடிதம் எழுதினார். அதற்கு மத்திய ரெயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவி தனது எக்ஸ்' வலைத்தள பக்கத்தில் பதிலளித்து வெளியிட்ட பதிவு வருமாறு:



தமிழகத்தில் ரெயில்வே மேம்பாட்டுக்காக மத்திய அரசு ரூ.6,362 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது. இந்த தொகை முந்தைய ஆட்சி காலத்தில் செய்யப்பட்ட சராசரி ஒதுக்கீட்டை விட 7 மடங்கு அதிகம். நமது அரசியலமைப்புச் சட்டத்தில் நிலம் என்பது மாநிலப் பொருளாகும். நிலம் கையகப்படுத்துவதில் உங்கள் அரசு எங்களுக்கு ஆதரவளித்தால் மட்டுமே திட்டங்களை விரைவாக நிறைவேற்ற முடியும். 2,749 ஹெக்டேர் நிலம் தேவைப்பட்ட நிலையில், இதுவரை 807 ஹெக்டேர் நிலம் மட்டுமே கையகப்படுத்தப்பட்டுள்ளது. நிலம் கையகப்படுத்துவதில் உங்கள் தலையீட்டை நாடுகிறோம். எங்கள் தரப்பில் இருந்து, நீங்கள் ஒரு அடி எடுத்து வைத்தால், தமிழகத்தில் ரெயில்வே மேம்பாட்டிற்கு 2 அடி எடுத்து வைப்போம் என்று உறுதியளிக்கிறோம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# அறந்தாங்கி அருகே கடைமடை பகுதிக்கு வந்த காவிரி நீர்: விவசாயிகள் மலர் தூவி வரவேற்பு

அறந்தாங்கி ஆக 21

புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி அருகே நாகுடி கடைமடை பகுதிக்கு வந்த காவிரி தண்ணீருக்கு விவசாயிகள் நெல்மணிகள் மற்றும் மலர்களை தூவியும் ஆரத்தி எடுத்தும் வரவேற்றனர்.

இந்த ஆண்டு மேட்டூர் அணை கடந்த மாதம் திறக்கப்பட்டது. தஞ்சை மாவட்டம் கல்லனையில் இருந்து கடந்த மாதம் 31 தேதி தண்ணீர் திறக்கப்பட்டது. ஆனாலும் கூட புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள கல்லணை கால்வாயில் பராமரிப்பு பணிகள் நடைபெற்று வந்ததால் இம்மாவட்டத்திற்கு தண்ணீர் திறக்கப்படாமல் இருந்தது. இதனால் சம்பா சாகுபடி பணிகளை மேற்கொள்ளும் விவசாயிகள் சாகுபடி பணிகளை மேற்கொள்வதற்குள் தண்ணீர் வந்துவிடுமா என்று எதிர்பார்ப்போடு காத்திருந்த நிலையில் பராமரிப்பு பணிகள் தற்காலிகமாக நிறுத்திவிட்டு புதுக்கோட்டை மாவட்டத்திற்கு தண்ணீர் திறக்கப்பட்டது.



இதனைத் தொடர்ந்து செவ்வாய் கிழமை காலை கடைமடை பகுதி நாகுடிக்கு வந்த காவிரி நீரை கல்லணை கால்வாய் பாசனதாரர்கள் விவசாயிகள் ஒருங்கிணைப்பு சங்க தலைவர் கொக்குமடை ரமேஷ் தலைமையில் சங்க நிர்வாகிகள் குடிக்காடு கணேசன், பொன்.கணேசன், உதவி பொறியாளர் கந்தசாமி, பிஎம் பெரியசாமி, கவிதாஸ்ரீகாந்த், நிலையூர் சரவணன், வீரப்பன், கோவிந்தராஜ், சிவா, தேவேந்திரன், ரபீக்முகம்மது, அருணாசலம், தமிழ்வாணன்உள்படதிரளானவிவசாயிகள் நெல்மணிகள், மலர்கள் தூவியும் மற்றும் ஆரத்தி எடுத்தும் வரவேற்று இனிப்புகள் வழங்கி தங்களது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் தொடர்ந்து மழை பெய்து வரக்கூடிய சூழலில் காவிரி நீரும் வந்து விட்டதால் இந்த ஆண்டு சம்பா சாகுபடி பணிகளை விவசாயிகள் நம்பிக்கையோடு மேற்கொள்வார்கள் எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

# விழுப்புரம் ஜே.ஆர்.சி ஆசிரியர்களுக்கு ஒரு நாள் பயிற்சி முகாம்

விழுப்புரம், ஆக. 21

விழுப்புரம் கல்வி மாவட்ட அனைத்து பள்ளிகளில் செயல்பட்டுவரும் ஜூனியர் ரெட் கிராஸ் அமைப்பின் பொறுப்பாசிரியர்களுக்கான ஒரு நாள் பயிற்சி முகாம் 19.08.20 24 அன்று ஸ்ரீ பாலாஜி திருமண மண்டபத்தில் நடந்தது. முகாமை மாவட்டக்கல்வி அலுவலர் தனியார் பள்ளிகள் அ.இளமதி துவக்கிவைத்தார்.ஜே.ஆர்.சி கன்வீனர் முனைவர். ம. பாபு செல்வதுரை தலைமையில் . இந்தியன் ரெட் கிராஸ் சொசைட்டி. பொருளர் V. சோழன். நிறுவன புரவலர்.




முகமதுஅக்பர்அலி.நிர்வாகக்குழு உறுப்பினர் த.பாலு. மாநில பயிற்றுனர் எம்.தண்டபாணி, V.சின்னப்பன். கள்ளக்குறிச்சி ஜே.ஆர்.சி கன்வீனர். D. மாயக்கண்ணன். கலந்துக்கொண்டனர். ஏற்பாட்டினை மாவட்ட . பொ ருளர். S. எட்வர்ட் தங்கராஜ, இனைக்கன்வீனர்கள் S.ரவீந்திரன் ஏ. .தமிழழகன்.

நிர்வாகிகள். K. ஞான வரவு. ஹரிபாபு.R.. T பிலிப் ஜெயன். B. மரிய ஜோசப் .சின்னப்பராஜ் P. மரியராஜ். A.எட்வின். ஹேமலதா,S. சரசு. R. மாலினிதேவி. ஹசீனா, ஷக்கீனா பிபி. ஏழுமலை, திரு.ராமமூர்த்தி. ஆகியோர் ஏற்பாடு செய்தனர். சுமார். 220 ஆசிரியர் பயிற்சி பெற்றனர்.

# 'பா.ஜ.க.வின் அனைத்து சதிகளையும் முறியடிப்போம்' ராகுல் காந்தி



புதுடெல்லி, ஆக. 21

காங்கிரஸ் எம்.பி. ராகுல் காந்தி தனது 'எக்ஸ்' வலைதள பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது; "அரசியலமைப்பு சட்டத்தையும், இடஒதுக்கீட்டு முறையையும் எப்படிப்பட்ட சூழலிலும் பாதுகாப்போம். பா.ஜ.க.வின் 'நேரடி நியமன திட்டம்' போன்ற அனைத்து சதிகளையும் முறியடிப்போம். நான் மீண்டும் சொல்கிறேன், 50 சதவீத இடஒதுக்கீடு வரம்பை உடைத்து, சாதிவாரி கணக்கெடுப்பின் அடிப்படையில் சமூக நீதியை உறுதி செய்வோம்."

இவ்வாறு ராகுல் காந்தி தெரிவித்துள்ளார்.



எதிர்க்கட்சித் தலைவர் கழக பொதுசெயலாளர் எடப்பாடியார் சேலம் இல்லத்தில் சந்தித்து திருப்பூர் புறநகர் மேற்கு மாவட்டம் போளியகவுண்டன்பாளையம் ஊராட்சி மன்ற தலைவர் அருள்மொழிகிருஷ்ணகுமார் சுந்தரகவுண்டனூர் எஸ்.ஏ. கிருஷ்ணகுமார் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் முன்னாள் தொடக்க கூட்டுறவு வங்கி தலைவர் பொள்ளாச்சி வடக்கு எம்ஜிஆர் இளைஞர் அணி செயலாளரின் அன்பு மகன் கே.ஹரிஷ் நடைபெறுகின்ற காதணி விழாவிற்கு வருகை தந்துஆசிவழங்குமாறு அழைப்பிதழை வழங்கினார்கள்.

# கடைகளில் தமிழ் பெயர் பலகை வைக்காவிட்டால் அபராதம் தமிழக அரசு

சென்னை, ஆக. 21

தமிழ்நாட்டில் பெரும்பாலான கடைகள் மற்றும் வணிக நிறுவனங்களின் பெயர் பலகைகள் ஆங்கிலத்தில் தான் உள்ளது. அனைத்து பெயர் பலகையிலும் தமிழைப் பயன்படுத்துவதை கட்டாயமாக்க வேண்டும் என்றும் அனைத்து பொது இடங்களிலும் உள்ள பெயர் பலகைகள் தமிழ் மொழியில் எழுதப்பட வேண்டும் என்றும் பல ஆண்டுகளாக தமிழ் ஆர்வலர்கள், அரசியல் கட்சித் தலைவர்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

தமிழக அரசின் தமிழ் வளர்ச்சித் துறையும், தொழிலாளர் நல ஆணையமும் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து கடைகள் வணிக நிறுவனங்கள் மற்றும் உணவு நிறுவனங்களின் பெயர் பலகை தமிழில் இருக்க வேண்டும் என்ற விதி பின்பற்றப்பட வேண்டும். இல்லையென்றால் சட்டப்படி கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டது. ஆனாலும் இதை முழுமையாக செயல்படுத்த முடியவில்லை.

இந்த நிலையில் தமிழில் பெயர் பலகை வைக்க நடவடிக்கை எடுக்காத அதிகாரிகள் மீது நீதிமன்ற அவமதிப்பு நடவடிக்கை எடுக்கக் கோரி மதுரை ஐகோர்ட்டு கிளையில் ஏற்கனவே ஒருவர் மனுதாக்கல் செய்திருந்தார்.

இந்த மனு விசாரணைக்கு வந்த போது தமிழில் பெயர் பலகை வைக்காத நிறுவனங்களுக்கு அபராதம் விதிக்கப்பட்டு வருவதாக அரசின் சார்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதற்கு முன்பு அபராதம் 50 ரூபாய் என இருந்த நிலையில் இப்போது ரூ.2000 அபராதம் விதிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதன் பிறகு தொழிலாளர்நலத்துறை சார்பில் தமிழில் பெயர் பலகை வைக்காத கடைகள் மற்றும் நிறுவனங்களின் மீது எடுக்கப்படும் நடவடிக்கை தீவிரப்படுத்தப்பட்டு வருகிறது.

இது குறித்து தமிழ் வளர்ச்சித் துறை அதிகாரி கூறியதாவது:

அரசு வெளியிட்டுள்ள அரசாணைப்படி ஒவ்வொரு நிறுவனங்களின் பெயர் பலகையும் தமிழில் இருக்க வேண்டும். அவர்கள் பிற மொழியை பயன்படுத்துவதை நாங்கள் தடுக்கவில்லை. ஆனால் அந்த பெயர் பலகையில் தமிழ் பெரிய அளவில் இருக்க வேண்டும்.

தமிழ், ஆங்கிலம் மற்றும் பிறமொழி பெயர் 5:3:2 என்ற வகையில் இடம் பெற வேண்டும்.

எல்லா இடங்களிலும் தமிழ் பெயர் பலகைகள் வைக்கப்படுவதை உறுதி செய்ய அடிக்கடி ஆய்வுகள் நடத்தப்படுகின்றன. தொழிலாளர் நலத்துறை அமைச்சர் சி.வி.கணேசன் மற்றும் தமிழ் வளர்ச்சி செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் ஆகியோர் எங்கு சென்றாலும் தமிழில் பெயர் பலகை வைக்குமாறு அறிவுறுத்தி வருகின்றனர்.

அதுமட்டுமின்றி இந்த இரு துறைகளின் சார்பில் கூட்டாக மாதம் இரு முறை ஆய்வுக் கூட்டமும் நடத்தப்படுகிறது. இதன் காரணமாக வணிக நிறுவனங்களில் பெயர் பலகைகளை தமிழில் வைக்க அதிகாரிகள் வலியுறுத்தி வருகின்றனர்.

அதையும் மீறி பிறமொழியில் மட்டும் பெயர்கள் இருந்தால் ரூ.2 ஆயிரம் அபராதம் விதிக்கப்பட்டு வருகிறது. இந்த நடவடிக்கை இப்போது தீவிரப்படுத்தப்பட்டு உள்ளது.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# பாஜகவை எதிர்க்கிற கூட்டணியில் தான் மா.கம்யூனிஸ்டு கட்சி இருக்கும்: பாலகிருஷ்ணன்



திருவாரூர், ஆக. 21

திருவாரூரில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் மாநில செயலாளர் கே.பாலகிருஷ்ணன் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது:

சுதந்திர தினத்தன்று கவர்னர் மாளிகையில் நடந்த தேனீர் விருந்தில் தி.மு.க. பங்கேற்றது குறித்து அரசு தான் பதில் சொல்ல வேண்டும். எங்களை பொறுத்த அளவு தி.மு.க. தேனீர் விருந்தில் பங்கேற்காது என்று தான் கூறினார்கள். தி.மு.க. அரசும், கவர்னரும் தொடர்ந்து முரண்பாட்டுடன் இருக்க வேண்டாம் என்பதற்காக தேனீர் விருந்தில் கலந்து கொண்டதாக கூறுகிறார்கள்.

கருணாநிதியின் உருவம் பொறித்த நாணயத்தை வெளியிட வேண்டும் என தமிழக அரசு, மத்திய அரசிடம் கேட்டதற்கு உடனடியாக ஒத்துக் கொண்டார்கள். அதே வேளையில், தமிழக அரசு கேட்கும் நிதியை மத்திய அரசு கொடுக்க மறுக்கிறது.

சொத்து வரி உயர்வு உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி சென்னை மாநகராட்சியை கண்டித்து வருகிற 28ந்தேதி போராட்டம் நடத்த உள்ளோம்.

பாஜக.வுடன் யார் கூட்டணியில் சென்றாலும் அவர்களை எதிர்க்கிற கூட்டணியில் தான் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி இருக்கும்.

இவ்வாறு அவர் கூறினார்.

# தூத்துக்குடியில் லாரியில் ரூ.5 லட்சம் பயோ டீசல் கடத்திய 2 வாலிபர்கள் கைது



தூத்துக்குடி, ஆக. 21

தூத்துக்குடி தென்பாகம் போலீசார் மற்றும் சிப்காட் போலீசார் இணைந்து தூத்துக்குடி மாநகரில் 3வது மைல் பகுதியில் நேற்று இரவு வாகன சோதனையில் ஈடுபட்டனர்.

அப்போது அந்த வழியாக வந்த ஒரு லாரியை தடுத்து நிறுத்தி விசாரித்தனர். அப்போது லாரியின் டிரைவர் மற்றும் கிளீனர் ஆகிய 2 பேரும் முன்னுக்குப்பின் முரணாக பதில் கூறியுள்ளனர்.

இதனால் சந்தேகம் அடைந்த போலீசார் லாரியின் பின்புறம் இருந்த சரக்கை சோதனை செய்தனர். அதில் பேரல்களில் பயோ டீசல் கடத்தப்பட்டு கொண்டு செல்லப்படுவதை போலீசார் கண்டுபிடித்தனர். இதையடுத்து அந்த டீசலுடன் லாரியை தென்பாகம் போலீஸ் நிலையத்துக்கு போலீசார் கொண்டு சென்றனர்.

லாரியில் இருந்த 2 பேரிடமும் விசாரணை நடத்தினர். அதில் லாரியை ஓட்டிய டிரைவர், தென்காசி மாவட்டம் பாவூர்சத்திரம் அருகே உள்ள கணக்கநாடார்பட்டி மேல அரியபுரத்தை சேர்ந்த லெட்சுமணன் என்பவரது மகன் சங்கர் (வயது 25) என்பதும், கிளீனர் கடையம் அருகே பால்வண்ணநாதபுரம் வடக்கு தெருவை சேர்ந்த ராமச்சந்திரன் என்பவரது மகன் தவமணி (24) என்பதும் தெரியவந்தது.

மேலும் தவமணி டிப்ளமோ படித்துவிட்டு லேப்டாப் சர்வீஸ் செய்யும் பணி செய்து வந்ததும் விசாரணையில் தெரிய வந்துள்ளது.

இந்நிலையில் லாரியில் சுமார் 48 பேரல்களில் 9 ஆயிரம் லிட்டர் பயோ டீசல் கடத்தி கொண்டு வந்தது விசாரணையில் கண்டு பிடிக்கப்பட்டது.

இதையடுத்து அவற்றை போலீசார் பறிமுதல் செய்து உணவு பொருள் கடத்தல் தடுப்பு பிரிவு போலீசாரிடம் ஒப்படைத்தனர். பிடிபட்ட 2 பேரையும் அவர்களிடம் ஒப்படைத்தனர். பறிமுதல் செய்யப்பட்ட பயோ டீசல் மதிப்பு ரூ.5 லட்சம் என்று கூறப்படுகிறது.

# வீட்டின் மேற்கூரையை தூக்கி வீசி யானைகள் அட்டகாசம்



வடவள்ளி, ஆக. 21

கோவை மேற்கு தொடர்ச்சி மலையையொட்டிய மருதமலை அடிவார பகுதியில் கடந்த சில நாட்களாக 2 காட்டு யானைகள் முகாமிட்டுள்ளன.

இந்த யானைகள் யானை மடுவு, அட்டுக்கல், குப்போபாளைம், நரசீபுரம் உள்ளிட்ட குடியிருப்பு பகுதிகளுக்குள் அடிக்கடி நுழைந்து வருகின்றன. அவ்வாறு நுழையும் யானைகள், விளைநிலங்களில் பயிரிடப்பட்டுள்ள பயிர்கள் மற்றும் வீடுகளை சேதப்படுத்தி வருகிறது.

இந்த நிலையில் நள்ளிரவில் வனத்தை விட்டு வெளியேறிய 2 காட்டு யானைகள், வள்ளியம்மன் கோவில் வீதி அருகே உள்ள ஆர்.வி.எஸ். தோட்டம் பகுதிக்குள் நுழைந்தது.

இந்த தோட்டத்திற்குள் உள்ள வீட்டில் பாண்டியம்மாள் என்பவர் தனது குழந்தைகளுடன் வசித்து வருகிறார். நள்ளிரவு நேரம் என்பதால் அவர் தனது குழந்தைகளுடன் வீட்டிற்குள் தூங்கி கொண்டிருந்தார்.

தோட்டத்திற்குள் புகுந்த யானைகள், வீட்டின் அருகே சென்றதும், அங்கிருந்த சிமெண்ட் சீட்டை உடைத்து தூக்கி எறிந்தது.

மேலும் வீட்டின் மேற்கூரையை தூக்கி எறிந்து சேதப்படுத்தியது.

சத்தம் கேட்ட, பாண்டியம்மாள் ஜன்னல் வழியாக வெளியே எட்டிப் பார்த்தார். அப்போது 2 யானைகள் வெளியில் நின்றிருந்தன. இதை பார்த்ததும் அச்சத்தில் உறைந்த அவர்கள் சத்தம் எழுப்பினர்.

இவர்களது சத்தம் கேட்ட அக்கம்பக்கத்தினர், வெளியில் யானை நிற்பதை பார்த்ததும் உடனடியாக வனத்துறையினருக்கு தகவல் கொடுத்தனர். வனத்துறையினர் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து, வீட்டிற்குள் இருந்தவர்களை பத்திரமாக மீட்டனர்.

தொடர்ந்து அங்கு முகாமிட்டு இருந்த 2 யானைகளையும் வனத்துறையினர் சைரன் எழுப்பி, அங்கிருந்த விரட்ட முயன்றனர். ஆனால் யானைகள் அங்கிருந்து செல்லாமல் அங்கேயே நின்றது.

தொடர்ந்து வனத்துறையினர் யானைகளை விரட்டும் பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது 2 யானைகளில் ஒரு யானை ஆவேசம் அடைந்து, முன்னேறிவந்து, தன்னை விரட்டுபவர்களை துரத்தியது. இதனால் வனத்துறையினர் மற்றும் பொதுமக்கள் யானை அருகில் செல்ல பயந்து, சற்று தூரத்தில் நின்றபடி விரட்டும் பணியில் ஈடுபட்டனர். அந்த பகுதியை விட்டு நகர்ந்து சென்ற யானை, அருகே உள்ள குடியிருப்புக்குள் நுழைந்தது. அப்போது அங்குள்ள வெள்ளிங்கிரி என்பவரது வீட்டின் ஜன்னல் கதவை பிடித்து இழுத்து சேதப்படுத்தியதுடன், அருகே இருந்த மின் கம்பத்தையும் இடித்து கீழே தள்ளியது. பின்னர் அங்கிருந்து சென்று, அடிவார பகுதியில் நின்று கொண்டன.

தொடர்ந்து வனத்துறையினர் யானைகளை அடர்ந்த வனத்திற்குள் விரட்ட நடவடிக்கை எடுத்து வருகின்றனர். ஆனால் யானைகள் அடர்ந்த வனத்திற்குள் செல்ல மறுத்து, ஊருக்குள் நுழைந்து வருகின்றன.

யானை நடமாட்டம் இருப்பதால் அப்பகுதி பொதுமக்கள் மிகுந்த அச்சத்தில் உள்ளனர். மின் விளக்குகள் சரியாக எரியாததால் இரவில் வெளியில் வரவும் அச்சமாக உள்ளது. எனவே இங்கு சுற்றி திரியும் யானையை அடர்ந்த வனத்திற்குள் விரட்ட வனத்துறையினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என வனத்துறையினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# ஒரு நாள் கலெக்டராக பணியாற்றிய மாணவி



காரைக்கால், ஆக. 21

காரைக்கால் மாவட்டத்தில் பள்ளி மாணவர்கள் மாவட்ட நிர்வாக செயல்பாடுகள் மற்றும் பிரச்சனைகளுக்கு தீர்வு காணுதல் மற்றும் வளர்ச்சி திட்ட செயல்பாடுகளை நேரடியாக அறிந்து கொள்ளும் வகையிலும், எதிர்காலத்தில் மாணவர்கள் சிறந்த குடிமக்களாக விளங்கவும், பள்ளி மாணவர்களுக்கு ஒருநாள் மாவட்ட கலெக்டராக பணியாற்ற வாய்ப்பு தரப்படும் என மாவட்ட கலெக்டர் மணிகண்டன் அறிவிப்பு வெளியிட்டார்.

இதனை தொடர்ந்து, காரைக்கால் மாவட்டத்தைச் சேர்ந்த 3 மாணவ, மாணவிகள் இதுவரை ஒருநாள் கலெக்டராகி, கலெக்டர் மணிகண்டனுடன் பணியாற்றியுள்ளனர். அந்த வரிசையில், காரைக்காலை அடுத்த நிரவி ஹுசைனியா அரசு உயர்நிலை பள்ளியில் 9ம் வகுப்பு பயிலும் மாணவி தஸ்னீம் அர்ஷியா என்ற மாணவி, காரைக்கால் மாவட்ட கல்வித்துறை அதிகாரிகளால், பேச்சாற்றல், அறிவு திறன் போன்ற செயல்களால் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அம்மாணவி மாவட்ட கலெக்டர் மணிகண்டனுடன் இணைந்து, பல்வேறு பணிகளில் ஈடுபட்டார். மேலும், மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற பொதுமக்கள் குறை தீர்ப்பு முகாம் மற்றும் பல்வேறு பணிகளில் மாணவி மாவட்ட கலெக்டர் மணிகண்டனுடன் இணைந்து செயல்பட்டார். மக்கள் குறை தீர்ப்பு கூட்டத்தில் மாவட்ட கலெக்டர் மணிகண்டன், அனைத்து அதிகாரிகளிடமும் இம்மாணவியை அறிமுகப்படுத்தினார்.

தொடர்ந்து, கலெக்டர் மணிகண்டன் கூறுகையில், ஒவ்வொரு மாணவர்களும் தங்கள் தகுதியை வளர்த்துக் கொள்ள வேண்டும். அதற்கு உங்கள் கல்வி ஒன்று தான் முக்கியம் என்ற கலெக்டர் மாணவியிடம் எதிர்கால திட்டங்கள் குறித்தும் கேட்டார்.

அதற்கு மாணவி தஸ்னீம் அர்ஷியா பேசுகையில், ஒரு கலெக்டருக்கான அதிகாரம், செயல்பாடு இவை அனைத்தையும், இன்றைய நாள் கண்கூடாக கண்டேன். எதிர்கலத்தில் நானும் ஐ.ஏ.எஸ். மாவட்ட கலெக்டராகி மக்களுக்கு சிறப்பான பணியை செய்வேன். என உறுதி அளித்தார். இந்நிகழ்வில் மேல்நிலைக் கல்வி துணை இயக்குனர் ராஜேஸ்வரி, முதன்மை கல்வி அதிகாரி விஜயமோகனா, மாணவியின் பெற்றோர் முகமது கியாசுதீன், நூருல் ஹையாத், பள்ளியின் முதல்வர் மற்றும் பெற்றோர்கள் அரசு அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

# ராஜபாளையம் அருகே ஆலையில் தீ விபத்து



ராஜபாளையம், ஆக. 21

விருதுநகர் மாவட்டம் ராஜபாளையம் அருகே சமுசிகாபுரத்தை சேர்ந்தவர் ஜெயபாலன். இவர் எஸ். ராமலிங்கபுரம் சாலையில் மருத்துவ துணி சலவை செய்யும் ஆலை நடத்தி வருகிறார்.

இந்த ஆலையில் ஜெயபாலன் சத்திரப்பட்டி, சமுசிகாபுரம், சங்கரபாண்டியபுரம் உள்ளிட்ட கிராமங்களில் இயங்கி வரும் மருத்துவ துணி உற்பத்தி ஆலைகளில் இருந்து கிரே கிளாத் எனப்படும் மருத்துவ துணியை வாங்கி தனது ஆலையில் அதனை சலவை செய்து வெண்மையாக மாற்றி வழங்கி வந்தார்.

இந்தநிலையில் நேற்று இரவில் ஆலையில் கிரே கிளாத் பண்டல்கள் மொத்தமாக சேமித்து வைக்கப்பட்டிருந்த கிட்டங்கியில் திடீரென தீ விபத்து ஏற்பட்டது. ஒரே அறையில் 100க்கும் மேற்பட்ட பண்டல்கள் மொத்தமாக அடுக்கி வைக்கப்பட்டிருந்ததால் ஒரு பகுதியில் பற்றிய தீ மளமளவென அனைத்து பகுதிகளிலும் பரவி கொளுந்து விட்டு எரிந்தது. இதனால் அந்த பகுதி முழுவதும் புகைமூட்டமாக காட்சி அளித்தது.

தீ விபத்து குறித்து அப்பகுதியை சேர்ந்தவர்கள் ராஜபாளையம் தீயணைப்பு துறைக்கு தகவல் தெரிவித்தனர். விரைந்து வந்த அவர்கள் சுமார் 4 மணி நேரம் போராடி தீயை கட்டுக்குள் கொண்டு வந்தனர். இந்த விபத்தில் சுமார் ரூ.2 கோடி மதிப்பிலான மருத்துவ துணி எரிந்து சேதமானது. தீ விபத்து குறித்து கீழ ராஜகுலராமன் போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# பஞ்சலிங்க அருவியில் சுற்றுலா பயணிகள் குளிக்க தடை



உடுமலை, ஆக. 21

திருப்பூர் மாநகர் மற்றும் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் கடந்த ஒரு வாரமாக மாலை நேரங்களில் மழை பெய்து வருவது தொடர்கிறது. நேற்று காலை வெயில் வாட்டி வதைத்த நிலையில் மாலையில் பலத்த மழை பெய்தது.

இதனால் சாலைகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. தாழ்வான பகுதிகளில் மழைநீர் குளம் போல் தேங்கியது. அவினாசி சுற்றுவட்டார பகுதிகளில் பெய்த மழை காரணமாக வேலாயுதம்பாளையத்தை சேர்ந்த துரைசாமி என்பவரது தோட்டத்தில் இருந்த தென்னை மரங்களில் இடி தாக்கியது. இதில் 5க்கும் மேற்பட்ட தென்னை மரங்கள் தீப்பற்றி எரிந்து நாசமானது. திருப்பூர் அங்கேரிபாளையம் பாலு இன்னோவேஷன் பகுதியில் மழைநீர் சாலையில் முழங்கால் அளவுக்கு சென்றது. இதனால் அப்பகுதியில் இருந்த மின்மாற்றி மற்றும் அந்த வழியாக வந்த சைக்கிள், இருசக்கர மற்றும் 4 சக்கர வாகனங்கள் தண்ணீரில் பாதிஅளவிற்கு மூழ்கின.

அவினாசி பச்சாம்பாளையம் பஸ் நிறுத்தம் பகுதியில் இருந்த பழமை வாய்ந்த புங்கன், இச்சி வேம்பு உள்ளிட்ட 5 மரங்கள் வேறுடன் முறிந்து விழுந்ததில் மின்கம்பிகள் துண்டிக்கப்பட்டன. இதனால் பச்சாம்பாளையம் பகுதி இருளில் மூழ்கியது.

உடுமலை மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் பெய்த பலத்த மழை காரணமாக திருமூர்த்திமலை பஞ்சலிங்க அருவியில் காட்டாற்று வெள்ளம் ஏற்பட்டது. இதனால் அடிவாரத்தில் உள்ள அமணலிங்கேஸ்வரர் கோவிலை மழை வெள்ளம் சூழ்ந்தது. இதையடுத்து அங்கு வந்திருந்த பக்தர்கள் அவசர அவசரமாக வெளியேற்றப்பட்டனர். வெள்ளத்தில் அடித்து வரப்பட்ட மரங்கள் கோவிலை சுற்றி அமைக்கப்பட்டிருந்த பாதுகாப்பு கம்பிவேலிகள் மீது மோதியது. இதில் பல இரும்பு தூண்கள் வளைந்து வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டன.

அமணலிங்கேஸ்வரர் கோவில் அறங்காவலர் குழு தலைவர் மொடக்குப்பட்டி ரவி தலைமையில் கோவில் ஊழியர்கள் வெள்ளத்தில் அடித்து வரப்பட்ட மரங்களை அகற்றும் பணியில் ஈடுபட்டனர். பஞ்சலிங்க அருவியில் சுற்றுலா பயணிகள் குளிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது.

உடுமலை திருமூர்த்திமலை அணையின் நீர்பிடிப்பு பகுதியில் நேற்று பலத்த மழை பெய்தது. இதன்காரணமாக பாலாறு, தோனி ஆறு உள்ளிட்டவற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. இதனால் அணைக்கு நீர்வரத்து அதிகரித்ததால் அணை அதன் முழு கொள்ளளவை நெருங்கியது. நீர்வரத்து அதிகரித்துள்ளதால் உபரி நீர் திறப்பதற்கு உண்டான முயற்சிகள் அதிகாரிகள் தரப்பில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதனால் பாலாற்றின் கரையோர பகுதி மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இன்று காலை 6 மணி நிலவரப்படி 60 அடி உயரம் கொண்ட அணையில் 58.71அடி உயரத்திற்கு தண்ணீர் உள்ளது. அணைக்கு வினாடிக்கு காண்டூர் கால்வாய் மற்றும் பாலாற்றின் மூலமாக 1200 கன அடி தண்ணீர் வந்து கொண்டுள்ளது. அணையில் இருந்து வினாடிக்கு 900 கன அடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது.

இதே போன்று அமராவதி அணையும் கடந்த ஒரு மாதமாக முழு கொள்ளளவில் நீடித்து வருகிறது. அதன் நீர் பிடிப்பு பகுதியில் தொடர்ந்து மழை பெய்து வருவதால் உபரி நீர் வெளியேற்றப்பட்டு வருகிறது. கனமழை பெய்வதற்கான சூழல் நிலவி வருவதால் அணைக்கு ஏற்பட்டுள்ள நீர்வரத்தை பொதுப்பணித்துறையினர் கண்காணித்து வருகின்றனர்.

# ராஜீவ் காந்தி பிறந்த நாள் விழாவில் பங்கேற்ற விஜய் வசந்த் எம்.பி.



கன்னியாகுமரி, ஆக. 21

கன்னியாகுமரி பாராளுமன்ற உறுப்பினர் விஜய் வசந்த் சமூக வலைதளத்தில் கூறியிருப்பதாவது:

இந்தியாவை மறுமலர்ச்சியின் பாதையில் வழிநடத்தி, நவீன இந்தியாவை உருவாக்கிய எழுச்சி நாயகன் முன்னாள் பாரத பிரதமர் ராஜீவ் காந்தி பிறந்த தினத்தில் அவரை போற்றி வணங்குவோம்.

இந்திய சுதந்திர போராட்ட வீரரும் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி முன்னாள் தலைவருமான தீரர் சத்தியமூர்த்தி பிறந்த தினத்தில் அவருக்கு புகழஞ்சலி.

# அரசியல் முதிர்ச்சியின்றி பேசி வருகிறார் அண்ணாமலைக்கு உதயகுமார் பதில்

மதுரை, ஆக. 21

மதுரையில் செய்தியாளர்களுக்குபேட்டிஅளித்த அதிமுகமுன்னாள்அமைச்சர் ஆர்.பி.உதயகுமார்கூறியதாவது:

அண்ணாமலை அரசியல் முதிர்ச்சியின்றி பேசி வருகிறார். திமுக பாஜக இடையிலான உறவை ரகசியமாக வைக்க வேண்டாம். வெளிப்படையாக அறிவித்து விடுங்கள். தமிழ்நாட்டு மக்களை ஏமாற்றாதீர்கள். மக்களுக்கு அல்வா கொடுக்காதீர்கள்.




வெள்ள நிவாரணம் கொடுக்க வரவில்லை, ஆறுதல் சொல்ல வரவில்லை, அவர் தமிழ்நாட்டுக்கு வர என்ன தகுதி இருக்கிறது... யோக்கியதை இருக்கிறது என்று எல்லாம் கேட்டது யார்? முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின், உதயநிதி ஸ்டாலின்.

பாதுகாப்புத்துறை அமைச்சரை அழைத்து வந்து விட்டீர்கள். மக்களின் வளர்ச்சிக்கு ராஜதந்திரத்துடன் பீகாரில் நிதிஷ்குமார் எப்படி நிதி வாங்கினார், ஆந்திராவில் எப்படி நிதி வாங்கினார்.

அதேபோல்நீட்தேர்வை ரத்து செய்யுங்கள் என ராஜ்நாத் சிங்கிடம் தமிழக அரசு கேட்டிருக்கலாம்.

வெள்ள நிவாரண நிதி தரவில்லை, பட்ஜெட்டில் நிதி ஒதுக்கவில்லை என்று கேட்டிருக்கலாம்.

அதையெல்லாம் விட்டு விட்டு எங்க அப்பாவை திமுககாரன் கூட இப்படி பாராட்ட மாட்டான் என்று ஒரு முதலமைச்சர் சொல்வது எப்படி ஏற்றுக் கொள்வது.

தமிழ்நாட்டின் உரிமையை அடமானம் வைத்து உங்கள் அப்பாவின் பெருமையை புகழ் பாடுவதால் தமிழ்நாட்டு மக்களுக்கு என்ன நன்மை கிடைக்கப்போகிறது என்பதுதான்மக்களின்கேள்வி என்று கூறினார்.

# கேரள நிலச்சரிவு: ரூ. 2 கோடி வழங்கிய மார்ட்டின் குழுமம்

கோவை, ஆக. 21

கேரளமாநிலம் வயநாட்டில், நிலச்சரிவால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் வகையில் மார்ட்டின் குழும நிர்வாக இயக்குனர் சார்லஸ் மார்ட்டின் 2 கோடி ரூபாய் வழங்கியுள்ளார்.



நிலச்சரிவுகளால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளவயநாடு மக்களுக்கு ஆறுதல் தெரிவித்துள்ள கோவை, மார்ட்டின் நிறுவனம், இந்த சவாலான நேரத்தில் அம்மக்களுக்கு உறுதுணையாக இருப்பதாக தெரிவித்துள்ளது.

வயநாட்டில் நிவாரணம் மற்றும் மறுவாழ்வு முயற்சிகளுக்கு 2 கோடி ரூபாய் வழங்கியுள்ள மார்ட்டின் நிறுவனம்,

அதில் ஒரு கோடி ரூபாயை, முதலமைச்சரின் பேரிடர் நிவாரண நிதிக்கு வழங்கியுள்ளோம்.

ஒரு கோடி ரூபாயை, இயற்கை பேரிடர்களின் போது நிவாரண பணிகளில் தீவிரமாக ஈடுபட்ட ரோட்டரி சங்கம் மூலம் நிவாரணப் பொருட்கள், மருத்துவ உதவி மற்றும் பிற அத்தியாவசிய சேவைகளை விநியோகிக்கவும் வழங்கியுள்ளதாக மார்ட்டின் குழும நிர்வாக இயக்குநர் ஜோஸ் சார்லஸ் மார்ட்டின் தெரிவித்துள்ளார்.

# ஊட்டி அரசு ஆஸ்பத்திரிகளில் போலீஸ் அதிகாரிகள் ஆய்வு

சென்னை, ஆக. 21

தமிழகத்தில் செப்.5 ந்தேதி ரேஷன் கடை ஊழியர்கள் வேலைநிறுத்த போராட்டத்தில் ஈடுபடப் போவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.



தமிழகத்தில் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தின் கீழ் செயல்படும் 35,000 ரேஷன் கடை பணியாளர்கள் செப்.5ல் வேலைநிறுத்தத்தில் ஈடுபட உள்ளனர்.

வேலைநிறுத்த போராட்டத்தில் ஈடுபடப்போவதாக தமிழ்நாடு அரசு நியாய விலைக்கடை பணியாளர்கள் சங்க சிறப்பு தலைவர் அறிவித்துள்ளார்.

10 அம்ச கோரிக்கைகளை நிறைவேற்ற வலியுறுத்தி திருவள்ளூரில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் ரேஷன் கடை பணியாளர் சங்க தலைவர் அறிவித்துள்ளார்.

# ராஜீவ் காந்திக்கு முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் புகழாரம்

சென்னை, ஆக. 21

மறைந்த முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் 80 ஆவதுபிறந்தநாள் கொண்டாடப்பட்டு வருகிறது.

இந்நிலையில் இந்தியாவுக்கான ராஜீவ் காந்தியின் தொலைநோக்கு முயற்சிகள் நமது முன்னேற்றத்திற்கு வழிகாட்டுவதாக முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் தனது எக்ஸ்வலைதளத்தில், "முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் 80வது பிறந்தநாளில், நமது தேசத்திற்கு அவர் ஆற்றிய குறிப்பிடத்தக்க பங்களிப்பை நாம்நினைவுகூருகிறோம். நவீன, தொழில்நுட்ப ரீதியாக மேம்பட்ட இந்தியாவுக்கான அவரது தொலைநோக்கு மற்றும் முன்னோடி முயற்சிகள் நமது முன்னேற்றத்திற்கு தொடர்ந்து வழிகாட்டுகின்றன" என்று முதல் அமைச்சர்மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

# மேட்டுப்பாளையம் - குன்னூர் மலை ரெயில் சேவை மேலும் 3 நாட்களுக்கு ரத்து



நீலகிரி, ஆக. 21

கோவை, நீலகிரி மாவட்டங்களில் கடந்த சில தினங்களாக கனமழை பெய்து வருகிறது.

இதனால் அவ்வப்போது மலைப்பகுதிகளில் மண் சரிவு ஏற்பட்டு வருகிறது. தொடர் கனமழை மற்றும் மண் சரிவு காரணமாக கடந்த ஒரு வாரமாக மேட்டுப்பாளையம் குன்னூர் இடையிலான மலை ரெயில் சேவை 22ம் தேதி வரை ரத்து செய்யப்படுவதாக தெற்கு ரெயில்வே நிர்வாகம் அறிவித்து இருந்தது.

இந்த நிலையில், தொடர் சீரமைப்பு பணிகள் காரணமாக, மேட்டுப்பாளையம் குன்னூர் இடையிலான மலை ரெயில் போக்குவரத்து ரத்து மேலும் 3 நாட்களுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது. அதன்படி, வருகிற 25ம் தேதி வரை ரெயில் சேவை ரத்து செய்யப்படுவதாக ரெயில்வே நிர்வாகம் அறிவித்துள்ளது.

# பள்ளிகளில் அனுமதியின்றி முகாம்கள் நடத்தக்கூடாது: தனியார் பள்ளி இயக்குநரகம்

கிருஷ்ணகிரி, ஆக. 21

தனியார் பள்ளியில் நடைபெற்ற என்.சி.சி. முகாமில் பள்ளி மாணவி பாலியல வன்கொடுமை செய்யப்பட்ட சம்பவம் கிருஷ்ணகிரியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. குற்ற செயலில் ஈடுபட்ட நபர் கைது செய்யப்பட்ட நிலையில், போலியாக என்.சி.சி. முகாம் நடத்தப்பட்டது தெரியவந்துள்ளது.

இந்தநிலையில், கிருஷ்ணகிரி சம்பவத்தின் எதிரொலியாக அனைத்து மாவட்ட கல்வி அலுவலர்களுக்கும் தமிழ்நாடு தனியார் பள்ளிகள் இயக்குநர் பழனிசாமி கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.




அதில், அனுமதி பெறுவதற்கான வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளது.

அதில் குறிப்பாக, முகாம்களுக்கு மாநில அமைப்புகள் மூலம் முறையாகபயிற்சிபெற்ற ஆசிரியர்கள் இல்லாமல் எந்த ஒரு அமைப்பும் பள்ளிகளில் செயல்படக்கூடாது எனவும், மாணவர்களுக்கு ஆண் ஆசிரியர்கள் மூலமும், பெண்களுக்கு பெண் ஆசிரியர்கள் மூலமும் பயிற்சிகள் வழங்க வேண்டும் எனவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், ஆசிரியர்களின் பாதுகாப்பின்றி எந்தவொரு அமைப்பு சார்பாகவும் மாணவ, மாணவியர்களை முகாம்களில் ஈடுபடுத்தக்கூடாது எனவும், முகாம்களில் பங்கேற்பது தொடர்பாக ஒவ்வொரு மாணவ, மாணவியரின் பொற்றோரிடம் தனித்தனியாக எழுத்துப்பூர்வமாக அனுமதி பெற வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக திமுக அரசு போராடி வருகிறது: கனிமொழி எம்.பி. பேச்சு

நெல்லை, ஆக. 21

நெல்லையில் கனிமொழி எம்.பி. பேசியதாவது:

எஸ்.எஸ்.ஏ.திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டிற்கு வரவேண்டிய பணமும், சென்னை மெட்ரோ ரெயில் திட்டத்திற்கு கிடைக்க வேண்டிய நிதியும், சென்னை, நெல்லை, தூத்துக்குடி மாவட்டங்களின் மழை வெள்ளபாதிப்புகளுக்கான நிவாரண நிதியும் வரவில்லை;



முதல்அமைச்சர் கேட்ட எந்த நிதியையும் மத்திய அரசு தரவில்லை இதற்கு மேல் திமுகவுக்கும், பாஜகவுக்கும் என்ன நெருக்கம் இருக்கிறது என நினைக்கிறீர்கள்?.

ஒடுக்கப்பட்ட மக்களுக்கு சமூக நீதி கிடைக்க வேண்டும் என பாடுபடக்கூடிய ஆட்சிதிமுகஆட்சி. தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக திமுக அரசு தொடர்ந்து போராடி வருகிறது.

இவ்வாறு அவர் கூறினார்.

# மத்திய அரசின் உயர்பதவிகளில் நேரடி நியமனம் என்பது சமூகநீதி மீதான தாக்குதல்: மு.க.ஸ்டாலின் கண்டனம்

சென்னை, ஆக. 21

முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள எக்ஸ் தளப்பதிவில் கூறியிருப்பதாவது:

சமூகநீதியை நிலைநாட்டவும். இட ஒதுக்கீட்டைப் பாதுகாத்து அது சரியான முறையில் நடைமுறைப்படுத்தப்படுவதை □வதுஉறுதி செய்யவும் கீழ்க்காணும் நடவடிக்கைகளை உடனே மேற்கொண்டாக வேண்டும்.

மத்திய அரசின் உயர்பதவிகளில் (லேட்டரல் என்ட்ரி) நேரடி நியமனம் என்பது சமூகநீதியின் மீது தொடுக்கப்படும் நேரடித் தாக்குதலாகும். தகுதிமிக்க பட்டியல், பழங்குடி இதர பிற்படுத்தப்பட்ட மற்றும் சிறுபான்மைச் சமூகங்களைச்சேர்ந்த அலுவலர்களுக்குரிய வாய்ப்புகளை உயர்மட்டத்தில்தட்டிப்பறிப்பதாகும். மத்திய அரசு இதனைக் கைவிட்டு, நிரப்பப்படாமல் இருக்கும் ஓ.பி.சி. எஸ்.சி/எஸ்.டி பிரிவினருக்குரிய பணியிடங்களை நிரப்புவதற்கு முன்னுரிமை அளிக்க வேண்டும், நியாயமான, சமத்துவமான முறையில் பதவி உயர்வு வழங்கப்படுவதை உறுதிசெய்திட வேண்டும்.

தொடக்கத்தில் இருந்தே நாங்கள் எதிர்த்து வருகிற 'கிரீமி லேயர்' முறையை முற்றிலுமாக ஒழிக்க வேண்டும். அதற்கு முன்பு, பல ஆண்டுகளாக உயர்த்தப்படாமல் இருக்கும் கிரீமி லேயருக்கான வருமான உச்சவரம்பை இனியும் தாமதிக்காமல் உடனடியாக உயர்த்திட வேண்டும். அனைத்திற்கும் மேலாக, நாடுமுழுவதும் சாதிவாரி மக்கள்தொகைக் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட வேண்டும். வரலாறு நெடுக தங்களுக்குரிய பங்கு மறுக்கப்பட்ட நம் சமூகத்தின் பிற்படுத்தப்பட்ட மற்றும் ஒடுக்கப்பட்ட பிரிவினருக்குக் கல்வி மற்றும் வேலைவாய்ப்புகள் நியாயமான முறையில் பகிர்ந்தளிக்கப்பட இது கட்டாயமாகும். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# திருப்பூரில் 14 வயது சிறுமியை கர்ப்பமாக்கிய பூசாரிக்கு 40 ஆண்டுகள் சிறை தண்டனை

திருப்பூர், ஆக. 21

திருப்பூர் மாவட்டம் மடத்துக்குளம் கொழுமம் பகுதியை சேர்ந்தவர் அய்யப்பன். இவர் கோவில் பூசாரி ஆவார். இவர் கடந்த 2021ம் ஆண்டு கோவிலுக்கு சாமி கும்பிட வந்த 14 வயது சிறுமியை ஏமாற்றி பாலியல் பலாத்காரம் செய்துள்ளார். இதில் அந்த சிறுமி கர்ப்பமானார்.

இது குறித்து சிறுமியின் பெற்றோர் உடுமலை மகளிர் போலீஸ் நிலையத்தில் புகார் அளித்தனர். புகாரின் பேரில் போக்சோ பிரிவின் கீழ் வழக்குப்பதிவு செய்து அய்யப்பனை போலீசார் கைது செய்துசிறையில்அடைத்தனர். இதுதொடர்பான வழக்கு விசாரணைதிருப்பூர் மாவட்ட மகளிர் கோர்ட்டில் நடந்து வந்தது.



இந்த நிலையில், இந்த வழக்கில் நேற்று தீர்ப்பு அளிக்கப்பட்டது. அதன்படி சிறுமியை பாலியல் வன்கொடுமை செய்த குற்றத்துக்கு 20 ஆண்டு சிறை தண்டனை, ரூ.5 ஆயிரம் அபராதம், கர்ப்பமாக்கிய குற்றத்துக்கு 20 ஆண்டு சிறை தண்டனை, ரூ.5 ஆயிரம் அபராதம், எஸ்.சி., எஸ்.டி. வன்கொடுமை பிரிவுக்கு ரூ.5 ஆயிரம் அபராதம், கொலை மிரட்டல் பிரிவுக்கு ரூ.2 ஆயிரம் என 17 ஆயிரம் அபராதம் விதித்து நீதிபதி ஸ்ரீதர் உத்தரவிட்டார்.

# ஒண்டிவீரனின் தேசப்பற்றையும், தியாக உணர்வையும் போற்றி வணங்குவோம்: டி.டி.வி. தினகரன் பேச்சு

சென்னை, ஆக. 21

அ.ம.மு.க. பொதுச்செயலாளர் டி.டி.வி. தினகரன் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில்,

ஆங்கிலேயர்களுக்கு வரிகட்ட மறுத்து அவர்களுடனான சுதந்திரப்போரில் வெற்றிவாகை சூடியவரும், போர்க்களத்தில் ஈடு இணையற்ற வீரராகவும் திகழ்ந்த நெல்லைச்சீமையின் மாவீரர் ஒண்டிவீரன் அவர்களின் நினைவு தினம் இன்று.



தேசத்தின் நலனுக்காகவும், மக்களின் பாதுகாப்பிற்காகவும் அந்நியப் படைகளை துணிச்சலுடன் எதிர்கொண்டு வீரமரணமடைந்த ஒண்டிவீரன் அவர்களின் தேசப்பற்றையும், தியாக உணர்வையும் எந்நாளும் போற்றி வணங்குவோம். என தெரிவித்துள்ளார்.

# கணவரை தவிக்கவிட்டு கள்ளக்காதலனுடன் ஓட்டம் பிடித்த இளம்பெண்.. அடுத்து நடந்த பரபரப்பு

குமரி, ஆக. 21

குமரி மாவட்டம் தக்கலை அருகே உள்ள மஞ்சாடி பகுதியை சேர்ந்த வாலிபருக்கும் மதுரையைச் சேர்ந்த 20 வயது இளம்பெண்ணுக்கும் 2 வருடங்களுக்கு முன்பு திருமணம் நடந்தது. இந்தநிலையில் வாலிபர் அடிக்கடி மதுகுடித்துவிட்டு மனைவியிடம் தகராறு செய்து வந்துள்ளார். இதனால் இளம்பெண் கணவரிடம் கோபித்துக் கொண்டு மதுரைக்கு சென்றார்.

இதையடுத்து வாலிபர் மதுரைக்கு சென்றுமனைவியை சமாதானப்படுத்தி மீண்டும் குடும்பம் நடத்த வருமாறு ரெயில் மூலம் அழைத்து வந்தார். ரெயிலில் கணவர் சிறிது நேரம் தூங்கினார். தூக்கத்தில் இருந்து அவர் கண்விழித்து பார்த்தபோது மனைவி, குழந்தையை காணவில்லை. இதனால் அதிர்ச்சி அடைந்த அவர் நடந்த சம்பவம் பற்றி தக்கலை போலீசில் புகார் கொடுத்தார். அதன்பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தினர்.

இதனை தொடர்ந்து பெண்ணின் செல்போன் சிக்னலை போலீசார்கண்காணித்தனர். அதில்அந்த பெண் கள்ளக்காதலனுடன் வெள்ளிச்சந்தை பகுதியில் வசித்தது தெரிய வந்தது. உடனே சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற போலீசார் அவர்களை மீட்டு காவல்நிலையத்திற்கு அழைத்து வந்து விசாரணை நடத்தினர்.

விசாரணையில் வெளியான திடுக்கிடும் தகவல்கள்:

கணவரிடம் கோபித்துக் கொண்டு வீட்டை விட்டு வெளியேறிய பெண் நாகர்கோவில் பஸ்நிலையத்திற்கு வந்துள்ளார். அங்கு வெள்ளிச்சந்தை அருகே உள்ள ஒரு வாலிபரை சந்தித்தார். அந்த வாலிபர் நைசாக பெண்ணிடம் பேச்சு கொடுத்துள்ளார்.

உடனே அந்த பெண், கணவர் மீதான கோபத்தில் மதுரைக்கு செல்வதாக பதிலளித்துள்ளார். பிறகு இருவரும் சேர்ந்து பஸ்சில் பயணித்தபோது வாலிபர் மனம் உருக பேச, அந்த பேச்சு பெண்ணை கவர்ந்துள்ளது. கள்ளக்காதலனின் பேச்சில் மயங்கிய அந்த பெண், அவருடன் சேர்ந்து வாழ முடிவெடுத்து திருநெல்வேலி ரெயில் நிலையத்தில் இறங்கினார்.

பிறகு கள்ளக்காதலனுடன் வெள்ளிச்சந்தை பகுதியில் குடும்பம் நடத்தியது போலீஸ் விசாரணையில் தெரிய வந்தது.

அதனை தொடர்ந்து கணவர் இருக்கும்போது கள்ளக்காதலனுடன் செல்லக்கூடாது என அந்த பெண்ணை போலீசார் எச்சரித்தனர். குடிகாரன் கூட எப்படி வாழ முடியும் என தன்னுடைய கருத்தை அவர் போலீசாரிடம் தெரிவித்தார். எனினும் நாங்கள் கள்ளக்காதலுக்கு ஒத்துழைக்க முடியாது என கூறி அந்த பெண்ணை அவரது பெற்றோருடன் போலீசார் அனுப்பி வைத்தனர். இந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# அந்த இயக்குனருடன் மீண்டும் பணியாற்ற விரும்பும் நானி



தமிழில் 'நான் ஈ' படத்தின் மூலம் பிரபலமானவர் நானி. இவர்தற்போது, விவேக்ஆத்ரேயாஇயக்கத்தில்'சூர்யாவின் சனிக்கிழமை' படத்தில் நடித்து முடித்துள்ளார். சமீபத்தில் இப்படத்தின் டிரெய்லர் வெளியாகி வைரலாகியது.

இப்படம் வரும் 29ம் தேதி வெளியாக உள்ளநிலையில், படக்குழு புரொமோஷன் பணிகளில் ஈடுபட்டுவருகிறது. அதன்படி, சமீபத்தில் சென்னையில் நடந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்ட நானி, விவேக் ஆத்ரேயா உடன் மீண்டும் பணியாற்ற விரும்புவதாக கூறினார். இந்த கூட்டணி இதற்கு முன்னதாக கடந்த 2022ம் ஆண்டு வெளியான 'அடடே சுந்தரா' என்ற படத்தில் இணைந்து பணியாற்றியது.

இப்படத்தில்நானிக்குஜோடியாகநஸ்ரியாநடித்திருந்தார். மேலும், இப்படம் விமர்சன ரீதியாகவும் வசூல் ரீதியாகவும் வெற்றி பெற்றது. நானி கூறியதுபோல் மீண்டும் இணைந்தால் அது அவர்களது 3வது படமாக இருக்கும். இது ரசிகர்களிடையே எதிர்பார்ப்பை அதிகரித்துள்ளது.

# பிலிம்பேர் விருதுடன் நடிகர் பிரதீப் ரங்கநாதன்




தமிழ் சினிமாவில் 'கோமாளி' படத்தின் மூலம் இயக்குநராக அறிமுகமானவர் பிரதீப் ரங்கநாதன். அதன்பிறகு, 'லவ் டுடே' படத்தை இயக்கி நடித்தார். இந்த இரு படங்களும் நல்ல வரவேற்பை பெற்றன. இதனைத் தொடர்ந்து விக்னேஷ் சிவன் இயக்கும் 'லவ் இன்சூரன்ஸ் கம்பெனி' படத்திலும், அஸ்வத் மாரிமுத்து இயக்கத்தில் டிராகன் படத்திலும் நடித்து வருகிறார். இந்நிலையில், பிரதீப் ரங்கநாதன் நடிக்கும் அடுத்த திரைப்படத்தைஇயக்குனர்சுதாகொங்கராவிடம்உதவியாளராக பணியாற்றிய கீர்த்தீஸ்வரன் இயக்க உள்ளார்.

இப்படத்தில் பிரதீப் ரங்கநாதனுக்கு ஜோடியாக மமிதா பைஜூ நடிக்க இருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது. மைத்ரி மூவி மேக்கர்ஸ் நிறுவனம் தயாரிக்கும் இந்த படத்தின் படப்பிடிப்பு விரைவில் தொடங்கும் என்று கூறப்படுகிறது.

'லவ் இன்சூரன்ஸ் கம்பெனி' படம் எதிர்காலத்தில் நடக்கும் காதலை மையமாக வைத்து எடுக்கப்பட்டு வருவதாக தகவல்கள் பரவி வருகிறது.

லவ் டுடே படத்திற்காக பிரதீப் ரங்கநாதனுக்கு சிறந்த அறிமுக கதாநாயகனுக்கான பிலிம்பேர் விருதை பெற்றுள்ளார்.ஒரு கையில் பிலிம்பேர் விருதுடன் பிரதீப் ரங்கநாதன் எக்ஸ் பக்கத்தில் பதிவிட்டுள்ள புகைப்படம் தற்போது வைரலாகி வருகிறது.

# அடுத்த கட்ட நகர்வு குறித்து அப்டேட் கொடுத்த நடிகர் பிரசாந்த்



கோலிவுட்டில் டாப் நடிகர்களில் ஒருவராக இருந்தவர் பிரசாந்த்.பின்னர்சிலகாரணங்களால்சினிமாவில்நடிக்காமல் இருந்தார். இவ்வாறு பல வருடமாக சினிமாவை விட்டு விலகி இருந்த நடிகர் பிரசாந்த், தற்போது கதாநாயகனாக நடித்து வெளியான படம் 'அந்தகன்'.

பாலிவுட்டில் ஸ்ரீராம் ராகவன் இயக்கத்தில் வெளியாகி பிளாக்பஸ்டர் ஹிட்டான 'அந்தாதூன்' படத்தின் ரீமேக்காக 'அந்தகன்' திரைப்படம் உருவானது. இந்த படத்தில் சிம்ரன், வனிதா, இயக்குனர்கே.எஸ்.ரவிக்குமார், யோகிபாபு, பிரியா ஆனந்த், சமுத்திரக்கனி உள்ளிட்ட பலர் நடித்தனர்.

இப்படம் கடந்த 9ம் தேதி வெளியாகி வசூல் ரீதியாகவும், விமர்சன ரீதியாகவும் பெரிய வெற்றியை பெற்றது. இந்நிலையில், அடுத்தகட்ட நகர்வு குறித்து நடிகர் பிரசாந்த் அப்டேட் கொடுத்துள்ளார். இது குறித்து அவர் கூறுகையில், 'ஆண்டுக்கு 4 படங்கள் நடிக்கலாம் என திட்டமிட்டுள்ளேன். குறிப்பிட்ட இயக்குனர்களுடன் என்றில்லை, அனைத்து இயக்குனர்களுடனும் இணைந்து பணியாற்ற விரும்புகிறேன்', என்றார்

# சர்ச்சை பேச்சுக்கு விளக்கமளித்த நிகிலா விமல்



பிரபல மலையாள நடிகை நிகிலா விமல். இவர் மலையாளத்தைத்தொடர்ந்து தமிழ், தெலுங்கு திரையுலகிலும் பணியாற்றி வருகிறார். இவர் நடிப்பில் சமீபத்தில் வெளியான படம் குருவாயூர் அம்பலநடையில். 'ஜெய ஜெய ஜெய ஹே' படப்புகழ் விபின் தாஸ் இயக்கிய இப்படம் கடந்த மே மாதம் 16ம் தேதி வெளியாகி மிகப்பெரிய வரவேற்பை பெற்றது.

இதில், பிருதிவிராஜ், பாசில் ஜோசப், நிகிலா விமல், அனஸ்வரா ராஜன், யோகி பாபு ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்திருந்தனர். சமீபத்தில், மாட்டிறைச்சி குறித்து நிகிலா விமல் பேசியிருந்தது சர்ச்சையானது. இந்நிலையில், சர்ச்சை பேச்சுக்கு நிகிலா விமல் விளக்கமளித்துள்ளார். இது குறித்து அவர் கூறுகையில்,

'நாம் சில கருத்துகளை கூறும் பொழுது, சிலர் அசிங்கமாக திட்டுவார்கள். சிலர் சரியாக பேசுகிறாள் என்பார்கள். இது போன்ற விஷயங்களில் நான் கூறிய கருத்திற்கு எதிராக கருத்து கூறுபவர்கள், அதற்கு பதில் கொடுக்க வேண்டும் என்று நினைப்பார்கள். ஆனால், நான் அதை செய்ய மாட்டேன். அப்படி, நான் ஏதாவது கூறினால் அவர்கள் அதை பெரிதாக்கி விடுவார்கள். இப்படி இருக்கும்போது நம்மை திமிர் பிடித்தவர் என்று கூட சொல்வார்கள், என்றார்.

# தமிழ் திரையுலகில் பாலியல் ரீதியான அத்துமீறல்கள் உள்ளன நடிகை சனம் ஷெட்டி



சென்னை போலீஸ் கமிஷ்னர் அலுவலக வளாகத்தில் செய்தியாளர்கள் சந்திப்பில் நடிகை சனம் ஷெட்டி கூறியதாவது:

பாலியல் வன்கொடுமை நிகழ்வுகள் குறித்து சொல்வதற்கே கஷ்டமாக உள்ளது. கடந்த ஒரு வாரத்தில் 4 வழக்குகள் பதிவாகி உள்ளது. கொல்கத்தாவில் நடந்த பாலியல் வன்கொடுமைக்காக இங்கு ஏன் போராட வேண்டும் என்று கூறுபவர்களுக்கு, நேற்று கிருஷ்ணகிரியில் 13 மாணவிகளுக்கு பாலியல் வன்கொடுமை நடைபெற்று உள்ளது. இதில் அப்பள்ளியின் முதல்வர் சம்பந்தப்பட்டு உள்ளார். பெங்களூருவில் 21 வயது பெண்ணுக்கு பாலியல் வன்கொடுமை நடைபெற்று உள்ளது. மராட்டிய மாநிலம் தானேவில் பள்ளி குழந்தைகளுக்கு பாலியல் வன்கொடுமை நடைபெற்று உள்ளது.

பெண்களை வெளியில் போகாதே, இது போன்ற ஆடைகளை போடாதே!, யாரையும் நம்பாதே என்று சொல்லி வளர்த்துக் கொண்டு இருக்கிறோம். இதை எவ்வளவு நாளைக்கு சொல்வது. பணத்தையும், அதிகாரத்தையும் வைத்து பலரும் தப்பித்து வருகின்றனர். நிர்பயா வழக்கில் 7 ஆண்டுகளுக்கு பிறகுதான் தண்டனை வழங்கப்பட்டு உள்ளது. பெண்களுக்கு எதிரான பாலியல் வன்கொடுமைகளை கண்டித்தும், பெண்கள் பாதுகாப்பை வலியுறுத்தியும், பெண்களுக்கு எதிரான குற்றங்களுக்கு உடனடியாக தண்டனை தரக் கோரியும் போராட்டத்தில் ஈடுபட உள்ளோம்.

இதற்கான அனுமதி கேட்டு காவல் ஆணையரை சந்திக்க வந்து உள்ளோம். காவல்துறை அதிகாரிகள் எங்களை ஆதரிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம். ஒவ்வொரு நாளும் நிறைய பெண்கள் சந்திக்கும் பிரச்சினையாக இது உள்ளது. காவல்துறையின் ஆதரவு இல்லாமல் இதனை செய்ய முடியாது.

பெண்களுக்கு எதிரான பிரச்சினைகளுக்கு ஆண், பெண் பேதமின்றி எல்லோரும் குரல் கொடுக்க வேண்டும். பெண்களுக்கு குடும்பத்திற்கு உள்ளேயும் கூட பாதுகாப்பு இல்லாத சூழ்நிலை உள்ளது. தயக்கம் இல்லாமல் அனைவரும் முன் வந்து இந்த விவகாரத்தில் குரல் கொடுக்க வேண்டும். ஒரு மாற்றம் நிச்சயமாக தேவைப்படுகின்றது. வரும் சனிக்கிழமை அன்று நாங்கள் போராட்டத்தில் ஈடுபட உள்ளோம் என கூறினார். மேலும் மலையாள திரை உலகில் நடிகைகள் சந்திக்கும் பாலியல் சிக்கல் குறித்து ஹேமா கமிட்டி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு உள்ளது குறித்த கேள்விக்கு பதில் அளித்த சனம் ஷெட்டி,

ஹேமா கமிட்டி அறிக்கை குறித்த விவரம் எனக்கு தெரியாது. ஆனால் இந்த நடவடிக்கையை நான் வரவேற்கிறேன். இது போன்று ஒரு அறிக்கையை அவர்கள் கொண்டு வந்ததற்கு ஹேமா அவர்களுக்கும், கேரள அரசுக்கும் நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ் திரையுலகில் பாலியல் ரீதியான அத்துமீறல்கள் உள்ளன. பட வாய்ப்புகளுக்காக அட்ஜஸ்ட்மென்ட் செய்ய சொல்லும் நிலை தமிழ் திரையுலகிலும் உள்ளது. கேரளாவை போன்று தமிழ் திரையுலகிலும் விசாரணை கமிட்டி அமைக்க வேண்டும்.

அட்ஜெஸ்ட்மண்ட் செய்தால்தான் வாய்ப்பு கிடைக்கும் என்ற கொடூரமான சூழ்நிலைக்கு எதிராக நான் குரல் கொடுத்து உள்ளேன். உங்கள் மேல் உங்களுக்கு நம்பிக்கை இருந்தால் அதற்கான வாய்ப்புகள் தேடி வரும். இவ்வாறு அவர் கூறினார்.

# வின்ஸ்டன்சலேம் ஓபன் டென்னிஸ்; முதல் சுற்றில் தோல்வி கண்ட சுமித் நாகல்



அமெரிக்காவின் வட கரோலினா மாகாணத்தில் வின்ஸ்டன் சலேம் ஓபன் டென்னிஸ் தொடர் நடைபெற்று வருகிறது. இந்த தொடரில் நேற்று நடைபெற்ற ஆண்கள் ஒற்றையர் பிரிவின் முதல் சுற்று ஆட்டம் ஒன்றில் இந்தியாவின் சுமித் நாகல், குரோஷியாவின் போர்னா கோரிக் உடன் மோதினார்.

இந்த ஆட்டத்தில் ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய போர்னா கோரிக் 64, 62 என்ற நேர் செட் கணக்கில் சுமித் நாகலை வீழ்த்தினார். இந்த தோல்வியின் மூலம் சுமித் நாகல் முதல் சுற்றுடன் தொடரில் இருந்து வெளியேறினார்.

# சர்வதேச டி20 கிரிக்கெட்; ஒரு ஓவரில் அதிக ரன்கள் யுவராஜ் சிங் சாதனையை முறியடித்த சமோவா வீரர்



2026ம் ஆண்டு டி20 உலகக்கோப்பை கிரிக்கெட் தொடர் இந்தியா மற்றும் இலங்கையில் நடைபெற உள்ளது. இந்த தொடரில் மொத்தம் 20 அணிகள் கலந்து கொள்ள உள்ளன. இதில் தற்போது வரை 12 அணிகள் தகுதி பெற்றுள்ளன. மீதமுள்ள 8 இடத்திற்கு தகுதி சுற்று ஆட்டங்கள் நடந்து வருகின்றன.

கிழக்கு ஆசியபசிபிக் பிராந்தியத்திற்கான டி20 உலகக்கோப்பை தகுதி சுற்று போட்டி ஒன்றில் சமோவா வனுவாடு அணிகள் மோதின. இந்த ஆட்டத்தில் முதலில் பேட்டிங் ஆடிய சமோவா 20 ஓவர்களில் 10 விக்கெட்டை இழந்து 174 ரன்கள் குவித்தது. சமோவா தரப்பில் டேரியஸ் விசர் 132 ரன்கள் குவித்தார்.

இதையடுத்து 175 ரன் இலக்கை நோக்கி ஆடிய வனுவாடு அணி 20 ஓவர்களில் 9 விக்கெட்டை இழந்து 164 ரன்கள் மட்டுமே எடுத்தது. இதன் மூலம் 10 ரன் வித்தியாசத்தில் சமோவா அணி வெற்றி பெற்றது. இந்நிலையில் இந்த ஆட்டத்தில் சதம் அடித்து அசத்திய டேரியஸ் விசர் சர்வதேச டி20 கிரிக்கெட்டில் ஒரு ஓவரில் அதிக ரன் அடித்த யுவராஜ் சிங், பொல்லார்டு, திபேந்திர சிங் ஐரி, நிகோலஸ் பூரன் (36 ரன்) ஆகியோரின் சாதனையை முறியடித்துள்ளார்.

அதாவது வனுவாடு வேகப்பந்து வீச்சாளர் நளின் நிபிகோ வீசிய ஒரு ஓவரில் டேரியஸ் விசர் 39 ரன்கள் எடுத்து உலக சாதனை படைத்தார். இந்த ஓவரில் டேரியல் விசர் மொத்தம் ஆறு பந்துகளில் ஆறு சிக்சர்கள் அடித்தார். மேலும் இந்த ஓவரில் மொத்தம் மூன்று நோபால்கள் வீசப்பட்டது.

இப்படி மொத்தமாக 39 ரன்கள் கிடைத்தது. இதன் மூலமாக சர்வதேச டி20 கிரிக்கெட்டில் ஒரு ஓவரில் அதிக ரன்கள் அடித்த வீரர் என்ர சாதனையை டேரியஸ் விசர் படைத்தார். சர்வதேச டி20 கிரிக்கெட்டில் ஒரு ஓவரில் அதிக ரன்கள் எடுக்கப்பட்ட விவரம்; டேரியஸ் விசர் (சமோசா) 39 ரன், யுவராஜ் சிங் (இந்தியா) 36 ரன், பொல்லார்ட்டு (வெஸ்ட் இண்டீஸ்) 36 ரன், ரோகித் சர்மா ரிங்கு சிங் (இந்தியா) 36 ரன், திபேந்திர சிங் ஐரி (நேபாளம்) 36 ரன், நிகோலஸ் பூரன் (வெஸ்ட் இண்டீஸ்) 36 ரன்

# மகளிர் டி20 உலகக்கோப்பை: ஐக்கிய அரபு அமீரகத்துக்கு மாற்றம்?

மகளிர் டி20 உலகக் கோப்பை கிரிக்கெட் தொடர் வங்காளதேசத்தில் அக்டோபர் 3ம் தேதி முதல் 20ம் தேதி வரை நடைபெறும் என சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி) அறிவித்திருந்தது. ஆனால், தற்போது வங்காளதேசத்தில் நிலவும் அசாதாரண சூழ்நிலை காரணமாக டி20 உலகக் கோப்பை தொடரை வேறு இடத்திற்கு மாற்ற ஐ.சி.சி திட்டமிட்டுள்ளது. டி20 உலகக்கோப்பை தொடரை இந்தியாவில் நடத்த பி.சி.சி.ஐ மறுப்பு தெரிவித்துவிட்டது. மழைக்காலம் என்பதால் போட்டியை நடத்த வேண்டாம் என முடிவு எடுக்கப்பட்டுள்ளது. யு.ஏ.இ (ஐக்கிய அரபு அமீரகம்) இலங்கை, ஜிம்பாப்வே ஆகிய 3 இடங்களில் ஏதாவது ஒன்றில்உலகக்கோப்பைதொடர்நடைபெறலாம்எனதகவல்கள்வெளியாகி உள்ளது. இந்தநிலையில்,மகளிர் டி20உலகக்கோப்பைஐக்கியஅரபுஅமீரகத்தில்நடைபெறஅதிகவாய்ப்புள்ளதாகதகவல்வெளியாகியுள்ளது. துபாய், அபுதாபி, சார்ஜாவில் உலக தரம் வாய்ந்த மைதானங்கள் இருப்பதால் ஐக்கிய அரபு அமீரகத்துக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என தகவல் வெளியாகியுள்ளது. இந்த விவகாரத்தில் ஐ சி சி விரைவில் இறுதி முடிவு எடுத்து அறிவிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# அவருடன் இணைந்து வேலை செய்ய மோர்னே மோர்கல் மிகவும் விரும்புவார் அல்பி மோர்கல் கருத்து



இந்திய ஆண்கள் கிரிக்கெட் அணியின் புதிய பந்துவீச்சு பயிற்சியாளராக தென் ஆப்பிரிக்க முன்னாள் வேகப்பந்து வீச்சாளரான மோர்னே மோர்கல் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் எதிர்வரும் வங்காளதேசத்திற்கு எதிரான டெஸ்ட் தொடரில் இருந்து பயிற்சியாளராக செயல்பட உள்ளார்.

இந்திய அணியின் புதிய தலைமை பயிற்சியாளரான கவுதம் கம்பீரின் பரிந்துரைப்படி மோர்னே மோர்கல் புதிய பந்துவீச்சு பயிற்சியாளராக நியமிக்கப்பட்டுள்ளார். மோர்னே மோர்கல் வெளிநாடுகளில் பெரிய அனுபவத்தை கொண்டுள்ளார்.

எனவே வருன் ஆஸ்திரேலியா தொடரில் அவர் இந்திய பவுலர்களுக்கு மிகப்பெரிய உதவியாக இருப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்நிலையில் இந்திய அணியில் தற்போதுநம்பர்1பவுலராகஇருக்கும்ஜஸ்ப்ரித்பும்ராவுடன் இணைந்து செயல்பட மோர்னே மோர்கல் விரும்புவார் என அவருடைய சகோதரர் அல்பி மோர்க்கெல் கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறியதாவது, உறுதியாக தெரியாது (இந்தியாவில் பிடித்த பந்துவீச்சாளர்). ஆனால் அவருக்கு ஜாஹீர் கான் மற்றும் ஜஸ்ப்ரித் பும்ரா மிகவும் பிடிக்கும் என நினைக்கிறேன். ஏற்கனவே சொன்னது போல அவர் என்ன நினைக்கிறார் என்பது துல்லியமாக எனக்குத் தெரியாது.

ஆனால் ஜஸ்ப்ரித் பும்ரா தற்சமயத்தில் உலகின் சிறந்த ஆல் பார்மட் பவுலராக திகழ்கிறார். அவர் மிகவும் ஸ்பெஷலானவர். எனவே அவருடன் இணைந்து வேலை செய்ய மோர்னே மோர்கல் மிகவும் விரும்புவார் என்பதை உறுதியாகச் சொல்வேன். இவ்வாறு அவர் கூறினார்.

# சர்வதேச கிரிக்கெட்டில் 16 ஆண்டுகள் நிறைவு; விராட் கோலி குறித்து தினேஷ் கார்த்திக் நெகிழ்ச்சி பதிவு



இந்திய அணியின் நட்சத்திர வீரரான விராட் கோலி நவீன கிரிக்கெட்டில்மிகச்சிறந்தபேட்ஸ்மேனாகபோற்றப்படுகிறார். கடந்த 2008ம் ஆண்டு 19 வயதுக்குட்பட்டோருக்கான உலகக்கோப்பை தொடரில் இந்திய அணிக்கு தலைமை தாங்கி கோப்பையை வென்று கொடுத்து சர்வதேச கிரிக்கெட்டில் அறிமுகமான அவர் குறுகிய காலத்திலேயே நிலையான இடத்தை பிடிக்கும் அளவுக்கு இந்தியாவின் மேட்ச் வின்னராக அவதரித்தார்.

அப்போதிலிருந்து உலகின் அனைத்து எதிரணிகளையும் பந்தாடி வரும் அவர் 26000+ ரன்களையும் 80 சதங்களையும் அடித்து இந்தியாவின் வெற்றிகளில் பங்காற்றி வருகிறார். மூன்று வகையான கிரிக்கெட்டிலும் மாபெரும் பேட்ஸ்மேனாக பார்க்கப்படும் விராட் கோலி இன்றளவும் வளர்ந்து வரும் வீரர்களுக்கு ஒரு முன்னுதாரணமாக திகழ்ந்து வருகிறார். அதேபோல நிறைய வெளிநாட்டவர்களும் அவரை பின்பற்றுகின்றனர். இதனிடையே கடந்த ஆகஸ்ட் 18ம் தேதி சர்வதேச கிரிக்கெட்டில் தன்னுடைய 16வது வருட பயணத்தை விராட் கோலி நிறைவு செய்துள்ளார். இதையடுத்து விராட் கோலிக்கு பல்வேறு தரப்பினர் வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்து வருகின்றனர். இந்நிலையில் இந்திய முன்னாள் கிரிக்கெட் வீரரான தினேஷ் கார்த்திக் விராட் கோலிக்கு வாழ்த்து தெரிவித்து தனது எக்ஸ் வலைத்தளப்பக்கத்தில் நெகிழ்ச்சி பதிவு ஒன்றை பதிவிட்டுள்ளார். தினேஷ் கார்த்திக் வெளியிட்ட பதிவில், உங்களுடன் விளையாடியதில் மகிழ்ச்சி கேப்டன். 16 ஆண்டுகள் ஆகியும் தீ இன்னும் பிரகாசமாக எரிகிறது என பதிவிடப்பட்டுள்ளது.




Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.